(இ) 1971-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 5 ஆம் நாள் ஒப்படை கேட்டு கொடுக்கப்பட்ட மனுவிற்கு, ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலத்தின் அண்டையில் உள்ள, ஆழ்வார்நாயக்கன் குளத்தின் ஆயக்கட்டு தார்கள் ஆட்சேபணை செய்ததால், மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்பட்டது. பின்னர் செம்மினிப்பட்டு பஞ்சாயத்து, ஒப்படை செய்வதற்கு சாதகமாக தீர்மானித்துள்ளதால், ஒப்படை செய்ய முறையாக மனுக்களைப்பெற்று, ஆக்கிரமிப்பு உள்ள பகுதியை உட்பிரிவு செய்து, ஒப்படை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*344 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், மாகரல் மேட்டு அரிசன காலனியில் குடியிருப்போர்க்கு, வீட்டுமனைப் பட்டா வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சென்னை நகரிலும், சென்னை நகரின் எல்லையினின்றும் 20 மைல் சுற்றுப்புறத்தில் செங்கற்பட்டு மாவட்டத்திலும் உள்ள அரசாங்கத்துக்குச் சொந்தமான நிலங்கள் குடிசை மாற்று வாரியத்திற்குத் தேவைப் படலாம் என்ற காரணத்தால், மேற்கண்ட நிலங்களை எவருக்கும் ஒப்படை செய்யவோ அல்லது குத்தகைக்கு விடவோ கூடாது என்று அரசு உத்திரவிட்டுள்ளது. செங்கற்பட்டு மாவட்டம், திருவள்ளூர் வட்டம் மாகரல் மேட்டு கிராமம் மேற்கூறப்பட்டுள்ள தடைக்குட்பட்ட பகுதியான 20 மைல் எல்லைக்குள் உள்ளதால், அக்கிராம புல எண். 192-ல் உள்ள நிலம் அங்கு குடிசைகள் கட்டி ஆக்கிரமித்துள்ள அரிசனங்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்படவில்லை.

திரு. கா. வேழவேந்தன் : சென்னை நகரத்தின் எல்லையிலிருந்து 20 மைல் தூரம் வரை பட்டா கொடுக்க முடியாது என்றாலும் கூட, மாகரல் மேட்டு அரிசன காலனியில் பல வருஷங்களாகக் குடியிருந்து வருகிற அரிசன மக்களை ஜாதி இந்துக்கள் வெளியேற்ற வழக்குத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதைத் தனி கேஸாக எடுத்துக் கொண்டு அவர்களுக்குப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தடை இருப்பதைத் தெரிவித்தேன். யாரையோ வெளியேற்ற முயற்சிப்பதாகச் சொன்னார்கள். அந்த இடம் எல்லாம் குடிசை மாற்று வாரியத்திற்குத் தேவைப்படுவதால் பட்டா வழங்க உத்தேசம் இல்லை என்று தெரிவித்தேன். வேறு புகார் இருந்தால் போலீசார் அல்லது ரெவின்யூ அதிகாரிகள் உதவி கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. பா. நாகலிங்கம் : முண்டியம் நகரில் பர்மா அகதிகளுக்குப் பட்டா கொடுக்கப்பட்டது, ஆனால் பழங்குடி மக்களுக்குப் பட்டா வழங்கப் படவில்லை என்பதை அரசு அறியுமா ? அந்தப் பழங்குடி மக்களுக்கு உடனடியாகப் பட்டா கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசு அறியாது. தகவல் தந்திருக்கிறார்கள். விசாரித்துப் பார்க்கலாம்.

வெட்டியார்கள், தலையாரிகளுக்கு வீடுகள்.

*345 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா ?

ஆதித் திராவிட சமுதாயத்தைச் சார்ந்த கிராம வெட்டியார்கள், தலையாரிகள் ஆகியோர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் ஆலோசனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : சமுதாயத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்ற வெட்டியான், தலையாரி போன்றவர்களுக்கு முழுமையாக இலவசமாக வீடுகள் கட்டித்தர இயலாவிட்டாலும், பாதி கடன், பாதி மானியம் தந்து அத்தகைய வசதிகளைச் செய்து கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தற்போது அத்திட்டம் அரசாங்கத் திடம் இல்லை.

தேசிய நெடுஞ்சாலை.

*287 வினா : திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ்நாட்டில் உள்ள தேசிய நெடுஞ்சாலையின் மொத்த தூரம் எத்தனை கிலோ மீட்டர் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 1,852 கிலோ மீட்டர்.

திரு. என். கிட்டப்பா : தமிழ்நாட்டில் தற்போதுள்ள தேசீய நெடுஞ் சாலைகள் எந்தெந்தப் பகுதியில் உள்ளன ? புதிய நெடுஞ்சாலைகளாக எவை எவை மத்திய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று நமது அரசு வேண்டுகோள் விடுத்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?